REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: பங்குனி 5உ திங்கள் (18—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 6உ செவ்வாய் (19—3—57) [இதழ் 238

தி. மு. க. பெற்றுள்ள வெற்றி

(18—3—57 நண்பகல்வரை)

★

சட்டசபை:	மக்கள் சபை:
12	4 (2 ஆதரவாளர்கள்)

(பெற்றுள்ள மொத்த வாக்குகள்)

சட்டசபை:	மக்கள் சபை:
13,94,250	11,05,132

கருணாநிதி கொட்டும் வெற்றி முரசு

எதிர்த்து நின்ற காங்கிரஸ் படுதோல்வி

கம்யூனிஸ்டு ஆதரித்த சுயேச்சை ஜாமீன் இழந்தார்

தோழர் மு. கருணாநிதி அவர்களின் வெற்றி, தி. மு. கழகம் பெருமைப்படுதற்குரிய மற்றொரு வெற்றியாகும்.

இதுவரை வந்துள்ள முடிவுகளின்படி தோழர் கருணாநிதியின் வெற்றியுடன், சட்டசபையில் தி. மு. கழகத்தவர் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்ட தொகுதியான குளித்தலையில், தோழர் கருணாநிதி அவர்கள், ஐந்து சுயேச்சைகள் உட்பட எதிர்த்து நின்ற 6 பேர்களையும் தோற்கடித்து மகத்தான வெற்றிபெற்றுள்ளார்.

காங்கிரஸ் அபேட்சகரைவிட தோழர் கருணாநிதி அவர்கள் 8,296 வாக்குகள் அதிகம் பெற்றிருக்கிறார் என்பது மகிழ்ச்சி தருவதாகும்.

சுயேச்சைகளில் ஒருவரான எஸ். சண்முகம் என்பவரை கம்யூனிஸ்டுகள் ஆதரித்துப் படுதோல்வி கண்டிருக்கின்றனர். அந்த அபேட்சகர், 3726 வாக்குகள் மட்டுமே பெற்று ஜாமீன் பறிகொடுத்த ஐந்து பேர்களில் ஒருவராகிவிட்டார்.

கழக அபேட்சகர்கள் பெறும் வெற்றி ஒவ்வொன்றும் 'அகில இந்தியர்'கள் அனைவருக்கும் எதிராகப் பெறப்படும் வெற்றி என்ற வகையில் தோழர் கருணாநிதி அவர்களின் வெற்றியும் மகத்தான சிறப்புக்குரியதாகும்.

வாக்குகள் விவரம்:

மு. கருணாநிதி	...	22,785
கே. தர்மலிங்கம் (காங்)	...	14,489
ஆர். வெங்கடராமன் (சுயே)	...	3,784
எஸ். சண்முகம் (சுயே)	...	3,726
ஆர். கோவிந்தன் (சுயே)	...	1,866
ஆர். இராசகோபால ஐயங்கார் (சுயே)	...	759
கே. பி. வீரப்பன் (சுயே)	...	740
செல்லாதவை	...	4

மத்திய மந்திரிகள் மண் கவ்வினர்!

கந்துபாய் தேசாய், படாஸ்கர் படுதோல்வி

புதுடில்லி, மார்ச் 16—

அகமதாபாத் இரட்டை உறுப்பினர் தொகுதியில், மக்கள் சபைக்குப் போட்டியிட்ட மத்திய சர்க்கார் தொழில் அமைச்சரான கந்துபாய் தேசாய் அவர்கள், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மகா குசராத் ஜனதா பரிஷத்தின் தலைவரான இந்துலால் யாக்னிக் என்பாரைவிட 1,27,513 வாக்குகள் குறைவாகப் பெற்றுப் படுதோல்வி அடைந்துவிட்டார்.

இதுவரையிலும் தோல்வியடைந்துவந்த மத்திய அமைச்சர்களுள், மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் தோற்கடிக்கப்பட்ட, மக்கள் நம்பிக்கையை இழந்த மந்திரி இவர்தான் முதல்வராவார்!

மகா குசராத் தலைவர் மொத்தம் 2,96,656 வாக்குகள் பெற்று மகத்தான வெற்றியடைந்திருக்கிறார்.

★

சட்ட அமைச்சர் படாஸ்கர் வீழ்ச்சி

பம்பாய், மார்ச் 17—

சம்யுக்த மகாராட்டிர சமிதியின் ஆதரவுடன் கிழக்கு கண்டேஷ் தொகுதியில் போட்டியிட்ட பி. சோ. கட்சி அபேட்சகர் பருஷா என்பார், சுமார் 25,000 வாக்குகளுக்கு அதிகமாகப் பெற்று, மத்திய சட்ட அமைச்சரான எச். வி. படாஸ்கரைப் படுதோல்வியடையச் செய்திருக்கிறார்.

மத்திய அமைச்சர் படாஸ்கருக்குப் பதிவான மொத்த வாக்குகள் 99,622 மட்டுமே! ஆனால், பி. சோ. அபேட்சகருக்கோ, 1,24,824 வாக்குகள் கிடைத்தனவாம்!

சென்னை சட்டசபைத் தேர்தல்

கட்சிகள் நிலவரம்

சென்னை, மார்ச் 18—

சென்னை சட்டசபைக்கு இதுவரையில் 194 இடங்களுக்குமுடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கட்சி நிலவரங்கள் வருமாறு:—

தி. மு. கழகம்	12
பி. சோ.	2
சோஷலிஸ்டு	2
சுயேச்சை	13
கம்யூனிஸ்டு	4
பார்வர்டு பிளாக்	2
கா. சீ. க.	16
காங்கிரஸ்	143

ஆத்தூர் தொகுதியில் இரட்டை வெற்றி

எம். பி. சுப்பிரமணியம், இருசப்பன் தேர்வு பெற்றனர்

கேலி செய்த கம்யூனிஸ்டுகள் ஜாமீன் பறிகொடுத்த பரிதாபம்!

ஆத்தூர், மார்ச் 17—

ஆத்தூர் (சேலம்) இரட்டை உறுப்பினர் தொகுதியில், கழகம் வெற்றி முரசு கொட்டியுள்ளது.

பொது, தனித் தொகுதிகளுக்குப் போட்டியிட்ட தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம், இருசப்பன் ஆகியோர், வாக்காளரின் அமோகமான ஆதரவுடன் வெற்றி பெற்றுள்ளனர்.

எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகர்கள் படுதோல்வி அடைந்தனர் என்பதுடன், கம்யூனிஸ்டு அபேட்சகர்கள் ஜாமீன் பறிகொடுத்துள்ளனர்.

'சட்டசபையில் என்ன செய்தார்?'—என்ற கேலிக்கும் கேள்விக்கும் தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் தந்துள்ள பதிலையே தோழர் சுப்பிரமணியம் அவர்களும் தந்துள்ளார்—அல்ல, கேள்வி கேட்டவர்களுக்கு—கேலி செய்தவர்களுக்கு வாக்காளர்கள் வளவனூரிலும் ஆத்தூரிலும் முகத்தில் அறைந்தாற்போன்று நல்ல பதில் தந்து பாடம் புகட்டியுள்ளனர்.

வாக்கு விவரங்கள்:

(பொதுத் தொகுதி)

எம். பி. சுப்பிரமணியம்	29,153
சாம்பசிவரெட்டி (காங்.)	22,937
எம். ஆறுமுகம் (சுயே.)	21,089
டி. ராமச்சந்திரன் (கம்.)	7,187
அகிலாண்டம்மாள் (சு.)	4,924

கடைசி மூவரும் ஜாமீன் பறிகொடுத்தார்கள்.

(தனித் தொகுதி)

இருசப்பன்	30,984
ஏ. துரைசாமி (காங்.)	13,138
சி. துரைசாமி (கம்.)	8,663
பெரியண்ணன் (சுயே.)	6,023
செல்லாதவை	5,175

கடைசி மூவரும் ஜாமீன் பறிகொடுத்தவர்களாவர்.

மற்றொரு மைசூர் மாநில அமைச்சர் தோல்வி!

பெங்களூர், மார்ச் 16—

மைசூர் அமைச்சரவை உறுப்பினர்களுள் இருவர், இதுவரை, தெரிந்துள்ள முடிவுகளிலிருந்து படுதோல்வியுற்றிருப்பதாகத் தெரிகிறது.

முதல் தடவையாக, மாநில உள்நாட்டு அமைச்சராக இருந்த எம். வி. இராமராவ் தோற்றுப் போன செய்தி கிடைத்தது.

இப்போது மீண்டும், குல்பர்கா மாவட்டத்தைச் சேர்ந்த யாட்கிர் தொகுதியில் போட்டியிட்ட எக்சைஸ் வரி, தொழில் அமைச்சரான ஜகன்னாதராவ் சந்திரிகி என்பார் படுதோல்வியடைந்த செய்தி கிடைத்துள்ளது.

இந்த அமைச்சரைத் தோற்கடித்தவர் ஒரு சுயேச்சை அபேட்சகர் என்பதும், அமைச்சரைவிட சுமார் 1,000 வாக்குகள் அதிகம் பெற்று அவர் வெற்றிபெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேப்பாள மன்னர் அன்பளிப்பு

ஹட்டன், மார்ச் 15—

இலங்கை பௌத்தர்களின் கிருவனத்திற்கு விலையுயர்ந்த வைரக்கற்கள் பதிக்கப்பட்ட புத்தர் சிலையை நேப்பாள மன்னர் அன்பளிப்பாகத் தந்துள்ளார். இத்துடன் ரொக்கமாக ரூ. 10,000 நன்கொடை அளித்துள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★

வெற்றி பெற்ற கழக வீரர்கள்

சட்டசபையில்......

1. அண்ணா
2. மு. கருணாநிதி
3. க. அன்பழகன்
4. ஏ. வி. பி. ஆசைத்தம்பி
5. சத்தியவாணிமுத்து
6. ஏ. கோவிந்தசாமி
7. ப. உ. சண்முகம்
8. எஸ். சந்தானம்
9. களம்பூர் அண்ணாமலை
10. எம். பி. சாரதி
11. எம். பி. சுப்பிரமணியம்
12. இருசப்பன்

* * *

மக்கள் சபையில்......

1. ஈ. வெ. கி. சம்பத்
2. தர்மலிங்கம்

(ஆதரவாளர்கள்)

3. டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி
4. என். சிவராஜ்

★★★★★★★★★★★★★★★★★★

நேரடிப் போட்டியில்

அசாம் அமைச்சர் படுதோல்வி!

அசாம் மாநிலத்திலுள்ள நாங்போ எனும் தொகுதியில் நேரடிப் போட்டியில் காங்கிரஸ் அபேட்சகராக நின்ற மாநில 'எக்சைஸ்' வரி அமைச்சரான ஆரோன் ஆலே என்பார் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார். மலைநாட்டு மக்கள் இயக்கத்தின் ஆதரவுடன் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சை அபேட்சகர் ஒருவர் சுமார் 9,000 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார்.

மற்றொரு பம்பாய் மந்திரி தோல்வி!

பம்பாய்—தானா மாவட்டத்தில் பிவாண்டி இரட்டைத் தொகுதியில் போட்டியிட்ட பம்பாய் மாநில விவசாய, ஆரே பண்ணைத் திட்ட அமைச்சரான முஸ்தபா குலாம் ரபி பாகி என்பாரை, சம்யுக்த மாராட்டிர சமிதியின் ஆதரவு பெற்ற பி. டபிள்யூ. பி. கட்சி அபேட்சகரான பி. எஸ். படீல் என்பார் தோற்கடித்திருக்கிறார்.

18/3/57

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18—3—57 திங்கள்

மீண்டும் வேதாளம்....!

வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்ட கதையாகத்தான் இருக்கிறது இஸ்ரேலின் போக்கு.

எகிப்தியருக்குச் சொந்தமான காஜா பகுதியில் ஐ. நா. படை பிரவேசித்ததும் அங்கிருந்து விலகிக்கொள்ளச் சம்மதித்திருந்த இஸ்ரேல், இப்போது காஜாவின் நிர்வாகத்தை எகிப்து மேற்கொள்ளும் என்ற நிலை பிறந்ததும், சண்டித்தனம் செய்ய முற்பட்டிருக்கிறது.

காஜா பகுதியை எகிப்து திரும்பப் பெறுவதை எந்தக் காரணத்திற்காகவும், எந்தச் சூழ்நிலையிலும் தாங்கள் அனுமதிக்கப்போவதில்லை என்று இஸ்ரேலியப் பிரதமர் பென்குரியன் கொக்கரித்திருக்கிறார்.

எகிப்துக்குத்தான் காஜா பிரதேசம் சொந்தம் என்பதை, பென்குரியனின் ஆவேசமோ அல்லது அவரது சகாக்களான கூட்டு ஆக்கிரமிப்பாளர்களான பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய ஏகாதிபத்தியங்களின் ஆணவமோ கூட மறுக்கவில்லை. என்றாலும், தனக்கே சர்வ சுதந்திரமும் உடைய ஒரு பகுதியை—அதுவும் ஆக்கிரமிப்புக்கு ஆளான ஒரு பிரதேசத்தை எகிப்து மேற்கொள்ளும்போது ‘அந்தப் பகுதியை விடமாட்டேன்’ என்று கொக்கரிப்பது, வீண் தகராறுகளைக் கிளப்புவதற்காகத்தானே இருக்க முடியும்?

காஜாவிலிருந்து இஸ்ரேலை வெளியேற்றும் பொறுப்பு ஐ. நா. படையைச் சார்ந்தது. அந்த வேலையை அது செய்தான பிறகு, அந்தப் பிரதேசத்தினை உரியவர்களிடத்தில் சேர்ப்பிப்பதும், ஐ. நா.-வின் பொறுப்புத்தான்.

துவக்கத்தில் இஸ்ரேல், ‘காஜாவிலிருந்து வெளியேறுகிறோம்’ என்று ஒப்பியது, ஏதோ போனால் போகிறது என்று பெரிய மனது வைத்து, இரக்கம் கொண்டு வெளிபேறச் சம்மதித்ததாக இஸ்ரேல் கருதுவதானால், அது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதாகும்.

‘வெளியேறுக’ என்பது, சர்வதேச மன்றத்தின் கட்டளை; இஸ்ரேலும் பிரிட்டனும் பிரான்சும் வெட்கம் துளியுமின்றி எகிப்துமீது ஆக்கிரமிப்புச் செய்த உச்சமான அக்கிரமத்தைக் கண்டித்து ஐ. நா. நிறைவேற்றிய தீர்மானத்தின் சாரம்! அதனை மறந்துவிட்டு தாங்களாக விரும்பி வெளியேறியதாக இஸ்ரேல் மமதை பேசுவது போலி கௌரவத்தைக்கூட உருவாக்கித் தராது.

ஐ. நா. தீர்மானத்திற்கு இஸ்ரேல் மதிப்பளித்து வெளிபேற மறுத்திருந்தால், ஐ. நா. படை பலாத்காரமாக இஸ்ரேல் துருப்புகளை வெளியேற்ற வேண்டிய கட்டாயம் பிறந்திருக்கும் என்பதை இஸ்ரேல் பிரதமர் பென்குரியன் மறந்துவிட்டார் போலும்!

‘குதிரை கீழே தள்ளியது மல்லாமல் குழியும் பறித்தது’ என்பார்கள். அது போலத்தான் இருக்கிறது, இஸ்ரேலின் விசித்திர வியாக்கியானம்!

‘நாங்களாக விரும்பித்தான் போனால் போகிறது என்று வெளியேறினோம்,’ என்று கூறுவதே முதல்தரமான பித்தலாட்டம்! போதாது என்று ‘நாங்கள் வெளியேறியதும் காஜா பகுதியில் ஐ. நா. படை நிரந்தரமாகக் கூடாரம் அடிக்கும்; எகிப்தினை நுழையவிடாமல் தடுக்கும் என்று எதிர்பார்த்தோம்,’ என்று பேசுவது, கீழே தள்ளியது போதாது என்று குழியும் பறிக்கும் கதைதானே!

மேலும் மேற்கு ஆசிய பிரச்சினைக்குத் தங்கள் விருப்பம் போல ஒரு முடிவு காணும் வரை, காஜாவில் எகிப்து நுழைவதை அனுமதிக்கமாட்டோம் என்ற இஸ்ரேலின் வாதமும் அபத்தமானதாகும்.

எகிப்து மீது ஆக்கிரமிப்புச் செய்த கொடுமைக்கு—‘பாப’த்திற்குப் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் சேர்ந்து, இஸ்ரேலும் பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டியிருக்க, இஸ்ரேல் பழி சுமத்தலைத் தேடி அலைவது விசித்திரமானதாகவே இருக்கிறது.

எகிப்துமீது ஆக்கிரமிப்புச் செய்தவர்கள் எச்ச சொச்சமின்றி முழுவதுமாக எகிப்தை விட்டு வெளியேறி, ஆக்கிரமிப்பால் தோன்றிய காஜா போன்ற தகராறுகளுக்கு பைசல் காணப்பட்டாலன்றி, மேற்கு ஆசியப் பிரச்சினையை முன்னுக்குத் தள்ளுவது முடியாத காரியமாகும்.

இஸ்ரேல் இதுபோன்ற வேதாளச் செயல்களை—சண்டித்தனத்தைக் கைவிட்டு, அராபியர் யூதர்கள்மேல் கொண்டுள்ள வெறுப்பு பகையாக மாறி தனக்கு ஆபத்து நேரிடாமல் பாதுகாப்பு வேண்டுமெனக் கோரினால் அது நியாயம்; அந்தப் பாதுகாப்பைத் தர, ஐ. நா.-வும் நிச்சயம் தயாராக இருக்கும்.

எகிப்து போன்ற அராபிய நாடுகளையும் இஸ்ரேல் நிலைத்துவிட்ட ஒரு சுதந்திரநாடு என்ற உணர்வைப் பெறச் செய்பலாம்.

அதைவிடுத்து, பிறரது உரிமைக்குட்பட்ட பகுதியை, ‘விடமாட்டேன்’ என்று கொக்கரிப்பது விரத்தையோ விவேகத்தையோ கொண்டதாக இருக்கமுடியாது என்பதுடன் கொடிய விளைவுகளையும் தேடித் தரும் என்று எச்சரிக்கிறோம்.

ரூபாய் நோட்டுக்களை எண்ண புது இயந்திரம்

புதுடில்லி, மார்ச் 16—

விநாடி ஒன்றுக்கு 16 நோட்டுகள் விதம் 7 விநாடிகளுக்கும் குறைவான நேரத்தில் 100-நோட்டுக்கள் அடங்கிய ரூபாய் கட்டை எண்ணி முடிக்கும் சக்தி வாய்ந்த ஒரு புதுவகையான ரூபாய் நோட்டுக்கள் எண்ணும் இயந்திரம் ஒன்றினை, பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துத் தயாரித்துள்ளதாம்!

வடநாட்டில் தொழிற்சாலை நிறுவ டில்லிப் பேரரசின் தாராளச் செலவு!

பிரிட்டிஷ் நிறுவனத்திற்கு 3 லட்சம் பவுன் வழங்கும்

கனரக மின்சார சாதனங்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான தகுந்த இடம் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த போபால்தான் என்று ‘அசோஷியேடட் எலக்ட்ரிகல் இண்டஸ்டிரீஸ்’ என்ற பிரிட்டிஷ் நிறுவனம் வெளியிட்ட சிபாரிசு ஒன்றில் தெரிவித்திருந்தது.

இப்போது, இந்தச் சிபாரிசினை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டுவிட்டதாகத் தெரிகிறது.

சிபாரிசினை ஏற்றுக்கொண்ட மத்திய சர்க்காரின் ஒப்புதலை அடுத்து, அப்பகுதியில் மேற்படி தொழிற்சாலை நிர்மாணத்திற்கான துவக்க வேலைகள் அனைத்தும் எற்கனவே மேற்கொள்ளப்பட்டு அபிவிருத்தி அடைந்து வருகிறதாம்!

இந்தியாவின் தற்போதைய வெளிநாட்டுச் செலாவணிக் கஷ்டத்தை ஒட்டி, இந்தியா இந்த தொழிற்சாலை அமைப்பு வேலைகள் மிகமிகத் துரிதமாக நடைபெற்றாக வேண்டும் என்ற நினைப்பால், வெகு நீண்டகாலத் தவணையில் கடன் கோரிக்கை எழுப்புவதென முடிவு செய்துள்ளதாகவும், அதற்குத் தங்களாலான உதவியைத் தருவதாக மேற்படி நிறுவனத்தார் ஒப்புதல் தந்துள்ளதாகவும் தெரிகிறது.

இத்தொழிற்சாலை நிர்மாண வேலைக்காக மேற்படி நிறுவனத்திற்கு மத்திய சர்க்கார், சுமார் 3 இலட்சம் பவுன் தர ஒப்புக்கொண்டுவிட்டதாம்!

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழர்களை நாடு கடத்தும் டில்லியின் திட்டம்

வாழ்வு தருவதாக ஆசைகாட்டி அந்தமானுக்கு வர வலை விசுகிறது

சென்னை, மார்ச் 15—

இந்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தின்கீழ் உள்ள அந்தமான், நிகோபார் தீவுகளை அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

இந்த ஆண்டில் சென்னை மாநிலத்தைச் சேர்ந்த 25 தொழிலாளர் குடும்பங்களை அங்கு நிரந்தரமாகக் குடியேற்ற இந்திய அரசாங்கம் விரும்புகிறதாம்.

அவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள ரூ. 800-ம், தட்டுமுட்டு சாமான்கள் வாங்கிக்கொள்ள ரூ. 130-ம் இந்திய அரசாங்கம் கடனாகத் தர முன்வந்திருக்கிறது.

இதை தவிர வாழ்க்கைச் செலவுகளுக்காக ரூ. 200-ம், வழிச் செலவுக்காக ரூ. 210 மானியமாகவும், ஆக மொத்தம் ரூ. 410 மட்டும் கொடுத்து, தச்சு வேலை, மரச்சாமான் வேலை, மரம் வெட்டும் வேலை முதலியனவற்றில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களை தேர்ந்தெடுத்து அந்தமானுக்கு அனுப்ப இந்திய அரசாங்கம் விரும்பியுள்ளது.

அந்தமானில் குடியேற விரும்பும் குடும்பங்களைப்பற்றி தகவல் அறிவிக்க வேண்டும் என்று கலெக்டர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

அங்கு செல்ல விரும்புவோர் தங்களின் பெயர், வயது, குடும்பத் தலைவரின் பெயர், விலாசம், தங்களை நம்பியுள்ளோரின் பெயர்கள் முதலியன குறிப்பிட்டு மனுச் செய்துக் கொள்ள வேண்டும். குடும்பப் பாரம் அதிகம் இல்லாதவர்களுக்கே முதல் சலுகைத் தரப்படுமாம்.

ஹெல்சிங்கியில், குரிலாவுக்கும் லட்டாவுக்குமிடையே இரு எக்ஸ்பிரஸ் இரயில்கள் மோதிக்கொண்டதால், 18 பேர் உயிரிழந்தனரென்று தெரியவருகிறது.

இமாலய அடிவாரத்தில் 50 கோடி டாலர் செலவில் உருவாகும் அணை

சட்லஜ் நதித் தண்ணீரை தடுத்து நிறுத்தும்; 65 இலட்சம் ஏகர் நிலம் சாகுபடியாகும்

34 எஞ்சினீயர்கள், தொழில் நுணுக்க நிபுணர்கள், 8,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்

லாஸ் எஞ்சலஸ், மார்ச் 15—

“இந்தியாவில் கட்டப்படும் பக்ரா-நங்கல் அணைக்கட்டு தற்பொழுது உலகத்தின் எந்தப் பாகத்திலும் கட்டப்பட்டுவரும் திட்டங்களில் மிகவும் பெரியதாக இருக்கிறது” என்று கலிபோர்னியா கட்டிட நிபுணர் ஒருவர் கூறியிருக்கிறார்.

இமாலயத்தின் அடிவாரத்தில் 50 கோடி டாலர் செலவில் இந்த அணை அமைக்கப்படுகிறது.

‘வி’ வடிவில் 700 அடி ஆழமுள்ள அருவியோடும் பள்ளத்தாக்கில் அடித்தளத்திற்காக 1955 நவம்பர் முதல், நாளொன்றுக்கு 24 மணி நேரத்தில் ஒவ்வொரு மணி நேரமும் 400 டன் காங்கிரீட் கொட்டப்படுகிறது என்று அக்கட்டிட நிபுணர் குறிப்பிட்டிருக்கிறார்.

சட்லஜ் நதியைத் தடுப்பதற்காக அது அடித்தளத்திலிருந்து 700 அடி உயரமும் 56 மைல் நீளமும் 4 மைல் அகலமும் கொண்ட ஒரு தேக்கமாக அமைந்த தண்ணீரை அது தடுத்து நிறுத்தும். அந்தத் தண்ணீரை உபயோகித்து 65 இலட்சம் எக்கர் புதிய நிலம் சாகுபடிக்குப் பயன் படுத்தப்படும். 10 இலட்சம் கிலோவாட்டுக்கு சமீபம் மின்சார உற்பத்தி கிடைக்கும்.

இந்த திட்டத்தில் 34 அமெரிக்க எஞ்சினீயர்கள்—தொழில் நுணுக்க நிபுணர்கள், எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த சுமார் 8,000 இந்தித் தொழிலாளிகள் உதவி செய்கின்றனர்.

குருமார்களே குழம்பிக் கிடக்கின்றனர்!

சிஷ்யர்களோ சிந்திக்கவே மறுப்பவர்கள்

ஸ்டாலின் பற்றி மீண்டும் வாக்குவாதம்

இலண்டன், மார்ச் 15—

ஸ்டாலின் இறந்து இரண்டரை ஆண்டுக் காலத்திற்குப் பிறகு குழிப் பிணத்தைத் தோண்டி எடுத்து குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, அவரைப் புகழ்ந்த அதே வாயால் குருஷ்சேவ், அவர் மீது குற்றங்களை அடுக்கிக்காட்டி ‘லெனினிசத்தின் பரம விரோதி ஸ்டாலின்,’ என்று இகழ்ந்தார். உடனே எல்லோரும், எல்லா நாட்டு கம்யூனிஸ்டுகளும்—இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்டுகள் உட்பட—‘ஆமாம்’ என்று தலையாட்டினர்!

ரஷ்யாவில் உள்ள தங்களது ஞானத் தாய்தந்தையர் பழித்ததும், இவர்களும் ஸ்டாலினைப் பழித்தனர்!

பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக ஸ்டாலினைப் பழித்ததின் விளைவுகள், குருஷ்சேவ் கும்பலின் ஆதிக்கத்திற்கு வேட்டு வைக்க முற்பட்டது கண்டதும் ஸ்டாலினை மீண்டும் புகழ ஆரம்பித்தனர் கிரெம்ளின் வாசிகள்!

உடனே இந்த சுயநல சந்தர்ப்பவாதிகளிடம் தங்கள் சிந்தையை அடகு கொடுத்துவிட்டு அவர்களிடம் ‘ஞானப்பால்’ குடித்துவரும் இந்தியக் கம்யூனிஸ்டுகளும், இதர நாட்டு கம்யூனிஸ்டுகளும் மீண்டும் இகழ்ந்த வாயால் புகழ முற்பட்டனர்!

இப்போது, ஸ்டாலினைப் பற்றி தாங்கள் செய்த குணதோஷ விமர்சனங்களை எல்லாம் மூட்டை கட்டிவைத்துவிட்டு, பழைய நிலைக்கே சென்றுவிட்டனர், குருஷ்சேவும் இதரும் என்று தெரியவருகிறது.

“லெனினிசத்தின் நோக்கங்களுக்கு ஸ்டாலின் விசுவாசமாகவே நடந்துகொண்டார்” என்று, ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சியின் மத்திய கமிட்டி இதழ் ஒன்று எழுதியிருப்பதாக மாஸ்கோ வானொலி கூறியுள்ளதாம்.

அடிப்படையான கம்யூனிசக் கோட்பாடுகளையே சீர்திருத்த வேண்டும் என்ற போக்கில் செல்வோரை அந்தக் கட்டுரை கண்டித்துள்ளதாம்.

“ரஷ்யாவில் சோஷலிச ராஜ்யத்தை உறுதி செய்யவேண்டியதின் அவசியத்திற்காக லெனினிசத்திற்கு துரோகம் இழைக்காமல், ஆக்க சக்தி கொண்ட மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டாக ஸ்டாலின் நடந்து கொண்டார்”

என்றும், அந்த இதழ் எழுதியுள்ளதாம்.

“இந்தச் சீர்திருத்தவாதிகள் மார்க்சிய - லெனினிசத்தின் புரட்சிக் கொள்கைகளையே மாற்ற விரும்புகின்றனர்”

என்றும் அந்தப் பத்திரிகை குற்றம் சாட்டியிருக்கிறதாம்!

அண்ணாவின் வெற்றி தரும் மகிழ்ச்சிப்பெருக்கு

நாடெங்கிலும் கொண்டாட்டம்

அண்ணா அவர்களது வெற்றி கேட்டு, தமிழகத்தின் பல இடங்களிலும் மகிழ்ச்சிப்பெருக்கின் காரணமாகப் பாராட்டு ஊர்வலங்களும், கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன; அவைகளின் விவரம் சுருக்கமாக இங்கு தரப்படுகிறது:—

அலவாக்கோட்டை :

9—3—57 மாலை 6½ மணிக்கு, அலவாக்கோட்டையூரில் தி. மு. கழகத் தோழர்களின் ஏற்பாட்டின்படி அண்ணாவின் உருவப் படம் சைக்கிளில் அலங்கரிக்கப்பட்டு தாரைதப்பு, தம்பட்டம், கொம்பு ஆகிய வாத்தியங்கள் முழங்க ஊர்வலம் நாமனூரிலிருந்து முக்கிய வீதிகளின் வழியாக கருத்தன்பட்டிவந்து இரவு 8½ மணிக்கு அலவாக்கோட்டையடைந்தது.

மீண்டும் அங்கிருந்து 1,000-த்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்ற மாபெரும் ஊர்வலம் ஒன்று 'அண்ணா வாழ்க' என்ற வாழ்த்தொலிகளுடன் முக்கிய வீதிகளில் பவனிவந்தது. பின்னர் தோழர் ஈ. ச. கண்ணப்பன் தலைமையில் தோழர்கள் சுப்பிரமணியன், கவின், பழனியப்பன், வெள்ளத்துரை ஆகியோர் அண்ணாவின் வெற்றி குறித்து வாழ்த்திப் பேசினர். பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் :

அண்ணாவின் வெற்றிச் செய்தியை அறிந்த யாழ்ப்பாண தி. மு. கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அளவிலா மகிழ்ச்சியால் திளைத்து பொது மக்களுக்கு இனிப்புகளும் நீர் பானங்கள் வழங்கியும் பட்டாசு வெடிகள் கொளுத்தியும் தத்தமது மகிழ்ச்சியை வெளிக்காட்டினர்.

யாழ்ப்பாண தி. மு. கழகப் பணிமனையில் தோழர் இரா. திருமறவன் அவர்களால் பொது மக்கட்கும், பல பிரமுகர்களுக்கும் தேனீரும், இனிப்பும் வழங்கி வெற்றி விழா இனிதே கொண்டாடப்பட்டது.

வீரசோழபுரம் :

8—3—57 அன்று வீரசோழபுரம் தி. மு. கழகச் சார்பில், அண்ணாவின் வெற்றி விழாவை மகிழ்வுடனும் பொதுமக்கட்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது. தோழர் கி. அரங்கநாதன் தலைமையில் அண்ணா அவர்களை வாழ்த்தி பாராட்டுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இராமேசுவரம் :

8—3—57 அன்று இராமேசுவரம் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் அண்ணாவின் உருவப்படத்தை மாலைகளால் அலங்கரித்தும் இனிப்புகள் வழங்கியும் வெற்றி விழா கொண்டாடப்பட்டது.

தங்கச்சிமடம் :

8—3—57 அன்று தங்கச்சிமடத்தில் அண்ணாவின் வெற்றியை முன்னிட்டு தி. மு. கழக ஆதரவாளர்களின் சார்பில் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

பாலையம்பட்டி :

8—3—57 மாலை 6-30 மணியளவில் பாலையம்பட்டி தி. மு. கழகச் சார்பில் அண்ணாவின் வெற்றி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அண்ணாவின் உருவப்படத்தை அழகுடன் அலங்கரித்து ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. ஊர்வலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டதும், 'குறவன்-குறத்தி' நகைச்சுவை ஆட்டம் பங்கேற்றதும் குறிப்பிடத்தக்கது.

ஆலந்தூர் :

8—3—57 மாலை 5-30 மணியளவில் ஆலந்தூரில் தி. மு. கழகச் சார்பில் அண்ணா வெற்றி விழா ஊர்வலம் வானவேடிக்கைகள், அதிர்வேட்டுகள் முழங்க ஆலந்தூர், பரங்கி ஆகிய ஊர்களின் முக்கிய வீதிகளில் வலம் வந்தது. கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பொதுமக்களுமாக ஏராளமானோர் ஊர்வலத்தில் கலந்து சிறப்பித்தனர். இரவு 9 மணிக்கு ஊர்வலம் முடிந்த பின்னர் அனைவருக்கும் கற்கண்டு அளிக்கப்பட்டது.

வால்பாறை :

10—3—57 அன்று வால்பாறை வட்டார தி. மு. கழகச் சார்பில் அண்ணா அவர்களின் வெற்றி விழா சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

பாம்பன் :

9—3—57 அன்று பாம்பன் தி. மு. கழகச் சார்பில் அண்ணாவின் வெற்றி விழா மாபெரும் ஊர்வலம் நடத்தியும், பொது மக்கட்கும் சிறுவருக்கும் இனிப்புகள் வழங்கியும் இனிதே கொண்டாடப்பட்டது.

கொளக்காநத்தம் :

8—3—57 இரவு 7 மணிக்கு, பெரம்பலூர் வட்ட கொளக்காநத்தத்தில் அண்ணாவின் உருவப் படம் மலர் மாலைகளால் அழகுடன் அலங்கரிக்கப்பட்டு தோழர் டி. சானகிராமன் தலைமையில் ஊர்வலமாக—கிளார்ணட் வாத்தியங்கள் முழங்க, வாண வேடிக்கைகளுடன் முக்கிய வீதிகளின் வழியே எடுத்துச் செல்லப்பட்டு வெற்றி விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஊர்வலத்தில் பலமாணவர்களும் மாணவிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

குணியமுத்தூர் :

10—3—57 அன்று குணியமுத்தூரில் தி.மு. கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் அண்ணாவின் வெற்றியைக் கேள்வியுற்று பெருமகிழ்வுற்றனர். மகிழ்ச்சிப் பெருக்கால் ஊரே விழாக்கோலப் பூண்டிருந்தது. வாண வேடிக்கைகளும், அதிர்வேட்டுகளும் முழங்க ஊர்வலம் தோழர் கே. ஏ. பழனியப்பன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தோழியர்கள் இராசம்மாள் இராமு, சரோசா தங்கமாணிக்கம், மாரியாயி ஐயாசாமி ஆகியோர் கொண்ட மகளிர் அணி ஊர்வலத்தில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

பழைய கும்மிடிபூண்டி :

10—3—57 மாலை 5-30 மணியளவில் பழைய கும்முடிபூண்டி தி. மு. கழகச் சார்பில் தோழர் தா. எல்லப்பன் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு பழைய கும்முடிபூண்டி, புதுகும்முடிபூண்டி ஆகிய இடங்களில் வலம் வந்தது. சிறுவர்களுக்கும் பொது மக்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

படப்பை :

8—3—57 அன்று படப்பை தி. மு. கழகத் தோழர்கள் அண்ணாவின் வெற்றிச் செய்தியை கேள்வியுற்று அளவிலா ஆனந்தத்தால் இல்லந்தோறும் இனிப்புகள் வழங்கியும் தோழர் எம். சுப்பிரமணியம் தலைமையில் ஊர்வலம் ஒன்று நடத்தியும் வெற்றி விழா கொண்டாடினர்.

தி. வெ. நல்லூர்

13-3-57 மாலை 4 மணியளவில் தி. வெ. நல்லூரில் அண்ணாவின் உருவப்படத்தை அழகுடன் அலங்கரித்து ஊர்வலமாக வாண வேடிக்கைகளுடன் முக்கிய வீதிகள் வழியே எடுத்துச்செல்லப்பட்டது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஊர்வலத்தில் கலந்து சிறப்பித்தனர். பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. வெற்றி விழாவில் தோழர்கள் சு. சண்முகம், தி. வ. அண்ணாதாசன் ஆகியோர் பேசினர்.

'இந்திச் செய்திப் பொறி' அமைப்பு ஏற்பாட்டின் மர்மம் என்ன?

மற்ற மொழிகள் அனைத்தும் அரசியல் சட்ட ஏட்டளவுடன் ஒடுங்கிவிட வேண்டியதுதானா?

தெளிவான சான்று காட்டிக் கேட்கிறது 'தமிழ் நாடு'

"இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாகவே தங்களுடைய மொழி ஆட்சியிருக்கையில் அரசோச்சும் காட்சியைக் கண்ணாரக் கண்டு களிக்க இந்தி மொழி ஆர்வலர்கள் துடிக்கிறார்கள்; அவர்களுடைய மொழிவெறி உணர்ச்சியை மதிக்கும் விதத்திலேயே இந்திய அரசாங்கத்தின் மனப்போக்கும், செயல் முறையும் இருந்து வருகின்றன.

"ஏறத்தாழ 13 கோடி மக்கள் மட்டுமே பேசிவரும் சிறு மொழி ஒன்றை மற்ற 23 கோடி மக்களின்மீது ஆட்சி மொழியாகத் திணிப்பதில்தான் எவ்வளவு ஆர்வம்! எத்தனை ஏற்பாடுகள் !!

"இந்தியாவின் வட்டார மொழிகளில் ஒன்றும், வரலாற்றுச் சிறப்பற்றதுமாகிய கதம்ப மொழி ஒன்றின் நிலையை உயர்த்த, மற்ற இந்தியப் பெருமொழிகள் பதின்மூன்றைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் செலுத்தும் வரிப் பணம் வாரி இறைக்கப்படுகிறது.

"இந்தி வளர்ச்சிக்குப் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன; ஆனால், வட்டார மொழிகளின் வளர்ச்சிக்காக உருப்படியான நடவடிக்கை ஏதாகிலும் எடுத்ததுண்டா?

"ஆங்கில ஆட்சிச் சொற்களுக்கு இணையான இந்திச் சொற்களை 'உற்பத்தி' செய்வதற்கு ஒரு தனிக்குழு நிறுவப்பட்டுள்ளது; புதுப் புது நூல்கள் இந்தியில் தோன்றுவதற்கு ஊக்கமளிப்பதற்காகப் பெருஞ் செலவில் திட்டமொன்று செயலாகி வருகிறது; இராணுவத்திலும் இந்தியை நுழைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன; கல்வி நிலையங்களிலும் இந்தியைப் புகுத்த பெரும் முயற்சிகள் செய்யப்படுகின்றன.

"இவற்றை எல்லாம் ஊன்றிக் கவனிக்குமிடத்து, இந்தி ஆர்வலர்களின் நோக்கம் இந்தியைப் பொதுமொழி ஆக்குவது மட்டுமல்ல; இந்தியாவின் ஒரே தேசிய மொழி என்ற நிலைக்கு இந்தியை உயர்த்துவதே அவர்களுடைய உள்நோக்கம் என்பது தெளிவாகிறது. இந்திச் செய்திப் பொறி அமைப்பு ஏற்பாடு இதற்கு மற்றொரு சான்றாகும்."

—இவ்வாறு, 'மொழி ஆதிக்கப் புது முயற்சி' என்ற தலைப்பில், 14—3—57 'தமிழ் நாடு' இதழ் தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

மொழி ஆதிக்க வெறியர்கள் மேற்கொண்டுள்ள சூழ்ச்சிகளை விளக்கி மேலும் அத்தலையங்கத்தில் எழுதப்பட்டிருப்பதாவது:—

"பொது மொழி என்ற பெயரால் இந்தியை, இந்தியாவின் ஒரே தேசிய மொழியாக்குவதற்குரிய சூழ்ச்சிகள் திட்டமிட்டு நடைபெற்று வருகின்றன என்பதை நாம் அவ்வப்போது எச்சரித்து வந்துள்ளோம். இந்த உண்மையை நிரூபிக்கும் மற்றொரு சான்று இப்பொழுது கிடைத்துள்ளது.

"பத்திரிகைகளுக்கு உடனுக்குடன் உலகெங்குமிருந்து தகவல்களைக் கொணரும் செய்திப் பொறியை ('டெலி பிரிண்டர்') இந்தியில் தயாரிப்பதற்குரிய ஏற்பாடுகள் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டன. மத்திய ஆட்சியாளரால் இதற்கென நிறுவப்பட்ட தனிக்குழு ஒன்று இச்சாதனையை நிலைநாட்டியுள்ளது!

"எடுத்ததற்கெல்லாம் தனிக் குழுக்களை நிறுவுவது இந்திய அரசாங்கத்தின் இயல்பான நடைமுறை நிகழ்ச்சியாகிவிட்டது! அதிலும், இந்தியைச் செயற்கை முறைகளில் வளர்ப்பதற்காக டில்லி செய்யும் முயற்சிகள் கொஞ்சநஞ்சமல்ல!

"இந்தியப் பொது வாழ்வில் இந்திக்கு உரிய இடம் என்ன என்பதை நிர்ணயிப்பதற்காக மத்திய ஆட்சி மொழிக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது; அக்குழுவின் அறிக்கை ஏறக்குறைய ஆறு மாதங்களுக்கு முன்பே அரசாங்கத்திற்கு கிடைத்துவிட்டது; ஆனால் இதுவரை அந்த அறிக்கையோ, அதன் மீது ஆட்சியாளர் செய்த முடிவுகளோ வெளியிடப்படவில்லை.

"ஆனால் அதற்குள், இந்தி வளர்ச்சிக்காக பல்வேறு ஏற்பாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக செய்யப்பட்டு வருகின்றன. அரசியல் சட்டம் கூறும் 15 ஆண்டுக்கால தவணை முடியும்வரைகூடக் காத்திருந்து பார்க்க இந்தி ஆர்வலர்களுக்கு பொறுமையில்லைபோலும்!

"நமது நாட்டில் செய்திப் பொறிகள் அனைத்தும் இப்பொழுது ஆங்கிலத்திலேயே செய்திகள் தருகின்றன. அந்தந்த வட்டார மொழி நாளிதழ்கள் அவற்றைத் தத்தமது மொழியில் மொழிபெயர்த்துக் கொள்கின்றன; இதுவே இன்றைய நடைமுறை. ஆனால், இந்தியில் செய்திப் பொறி அமைத்துவிட்டால், இந்தி மொழி நாளிதழ்களுக்கு மட்டுமே வசதியாயிருக்கும். ஏனெனில் இந்தி மொழி தவிர்த்த மற்ற மொழியினருக்கு இதனால் ஒரு சிறிது நன்மையும் கிடைக்காது.

"எதிர்கால இந்தியாவில் வட்டார மொழி நாளிதழ்களுக்கே சிறப்பிடம் இருக்க முடியும் என்பதை பெருந்தலைவர்களே ஏற்றுக்கொள்கின்றனர். அப்படியிருக்க, தமிழ், தெலுங்கு மலையாளம், கன்னடம் போன்ற திராவிட மொழிகளிலும் மராத்தி, வங்கம், குசராத்தி, உருது போன்ற பெரு மொழிகளிலும் செய்திப் பொறிகளைத் தயாரிப்பதற்கு உரிய திட்டம் எதையும் மத்திய ஆட்சியாளர் மனத்திலும் கொண்டிருக்கவில்லை. ஏன்? இதில் ஒரு இரகசியம் இருக்கிறது.

"இந்தியாவில் தாய் மொழி நாளிதழ்கள் பல அந்தந்த வட்டாரங்களில் சிறந்த செல்வாக்கு பெற்றிருந்தபோதிலும், ஆங்கில நாளிதழ்களே அனைத்திந்திய அடிப்படையில் பொதுச் சிறப்பு நிலை பெற்றுள்ளன. ஆகவே, பத்திரிகை உலகில் ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பெறச் செய்வதற்குரிய சூழ்ச்சியே இந்திச் செய்திப் பொறி அமைப்பு.

"பொது வாழ்விலும், நிருவாகத்திலும் ஆங்கிலத்தின் இடத்தை இந்தி ஆக்கிரமிப்பதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே தயாராகி வருகின்றன. அதே முயற்சி தான் பத்திரிகை உலகிலும் ஊடுருவுகிறது.

"எவ்வளவு செல்வாக்குடன் எத்தகைய மொழி ஆதிக்கம் விரிவான முன்னேற்பாடுகளுடன் உருவாகி வருகின்றன என்பதற்கு இவையெல்லாம் தெளிவான சான்றுகள்.

"இந்தி மொழி ஆதிக்க ஏற்பாடுகளை முளையிலேயே கல்லியெறியாவிட்டால், இந்தி தவிர்த்த மற்ற இந்தியப் பெருமொழிகள்தத்தமது வட்டாரத்துடனும், அரசியல் சட்ட ஏட்டளவிலும் அடங்கி ஒடுங்கிக் கிடக்க வேண்டியதுதான்."

அங்கேதான் ஆபத்து!

"ஒரு ஆண் மகன், பெண் ஒருத்தியைப் பார்க்கும்போது, அந்தப் பெண்ணுடைய கவர்ச்சிகரமான அங்கங்களை ஆராய்ச்சி நோக்குடன் காணத் துவங்குகிறான்; அந்தப் பார்வையில், உணர்ச்சியைத் தூண்டும் ஏதேனும் அகப்பட்டால், அது உடனே பரிசீலனைப் பார்வையாகிவிடுகிறது! அங்கேதான் ஆபத்து முளைக்கிறது,"

என்று எகிப்திய மதத் தலைவர் ஒருவர், 'எகிப்திய பெண்கள் பொது இடங்களில் நடமாடுவது மதத்திற்கு விரோதமானது,' என்று குறிப்பிட்டுக் கண்டிக்கும் போது கூறியிருக்கிறார்.

மேலும் ஷேக் ஹாசன் மாமூன் என்ற அந்தத் தலைவர், 'இந்த நாட்களில் பெண்கள் செய்யும் ஒவ்வொன்றும், மனிதர்களின் கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டுவனவாகவே உள்ளன' என்றும் கூறியிருக்கிறாராம்.

இந்தியத் தூதுவர் அலுவலக ஊழியர் இல்லம் தாக்கப்பட்டதாம்!

ஜகார்தா ஆர்ப்பாட்டக்காரர்களின் செயலாம்

ஜகார்தா, மார்ச் 15—

இங்குள்ள இந்தியத் தூதுவர் அலுவலகத்தவர் குடியிருக்கும் மாளிகை ஒன்றை சுமார் 200 பேர்கொண்ட கூட்டம் ஒன்று தாக்கி பலத்த சேதங்களை விளைவித்திருக்கிறதாம்.

சிறை கொண்டனர்

அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர் ஒருவரையும் கூட்டத்தினர், சிறைகொண்டனராம்.

கட்டிடத்தை இடிக்க!

பின்னர், கட்டிடம் முழுவதையும் இடித்துக் குட்டிச்சுவராக்கும் நோக்குடன் தாக்குதலைத் தீவிரமாக்கினராம். கடைசியாக அந்தக் கூட்டத்தவர், கட்டிடத்தின் கூரையை மட்டும் பிய்த்துக் கொண்டு ஓடிவிட்டனராம்.

காரணம் என்ன ?

இந்தியத் தூதுவர் அலுவலகத்தவரின் வீடு தாக்கப்பட்டதற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை.

நேற்று முதல், நாடு முழுவதும் இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததேயாகும்.

'அகில இந்தியா'க்களின் சதியை அறிவோம்

தில்லு முல்லுகள் செய்தவர்களை நீதிமன்றத்தில் சந்திப்போம்

மந்திரிகள் பெற்றது வெற்றியா?

சேலத்தில் அண்ணா முழக்கம்

"இத்தேர்தலில் 'அகில இந்தியா'க்கள், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராகச் செய்த சதியை நாம் நன்கு அறிந்தே இருக்கிறோம்" என்று முழங்கியுள்ளார், அண்ணா!

"கம்யூனிஸ்டுகள் நமக்கு எதிராகச் சதியில் ஈடுபடாமலிருந்தால்தான் அது ஆச்சரியத்திற்குரியது" என்று அவர்களின் சுயரூபத்தை அம்பலப்படுத்தினார், அண்ணா!

சேலத்தில் கடந்த 12—3—57 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரையின் ஒரு பகுதி கீழே தரப்படுகிறது:—

"இருபத்திரண்டு ஆண்டுகளாக தேர்தல் அனுபவம் பெற்றிருப்பவர் காமராசர். ஆனால் நாமோ, மார்ச் முதல் தேதியிலிருந்து 12-ந் தேதிவரையிலுமாகப் பன்னிரண்டு நாள் அனுபவம் மட்டுமே பெற்றவர்கள். இருந்தும், காமராசர் போகாத இடமில்லை; பார்க்காத பெரிய மனிதர்கள் இல்லை; கேட்காத ஜோதிடம் இல்லை; அந்த அளவுக்கு அவரை அல்லல் படுத்திவிட்டது நமது 12-நாள் அனுபவம்!

"காமராசர் சாத்தூர் தொகுதியில் நின்றார். பெரியார் அகராதிப்படி, ஆச்சாரியாரும் அண்ணாதுரையும் காமராசரைக் கவிழ்க்கச் சதிசெய்கிறார்கள் என்பது உண்மையானால், நாம் எங்கே சென்றிருக்கவேண்டும்? சாத்தூருக்கல்லவா சென்றிருக்க வேண்டும்? அங்கு ஒரு கூட்டத்திற்காவது நாம் சென்றோமா?

"அவ்வாறு சென்றிருந்தால் இன்றையத்தினம் 3,000 ஓட்டுகள் வித்தியாசத்தில் காமராசர் வெற்றிபெற்றிருக்க முடியுமா? ஒரு நாட்டின் முதலமைச்சர்—குலக் கல்வியை ஒழித்தவர்—அதற்காக நம்மால் மட்டுமல்லாமல் நாடு முழுமையிலும் பாராட்டப்பட்டவர்—அவருக்கு அங்கே எதிர்ப்பு என்று தெரிந்தும் போகவில்லை—ஏன்? அதுதான் அரசியல் நாகரீகம்; அந்த அரசியல் நாகரீகம் நம்மிடம் இருக்கிறது.

"நாடெங்கும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆர்வத்தோடு சொன்னார்—'150 இடங்களில் போட்டியிட வாய்ப்பு இருக்கிறது' என்று; தோழர் சம்பத், '200 இடங்களிலும் நிற்கலாம்' என்றார்; நான் கூட்டிக் குறைத்து '150 இடங்களுக்கு நிற்கலாம்' என்றேன். உடனே '150 அப்பாவிகள் கிடைத்துவிட்டார்கள்' என்று கூறினர். முதலில் அவர்கள், 'இவர்களுக்குத் தேர்தலில் நிறுத்திவைக்க ஆளே கிடையாது' என்றனர்; பின்னர், 'கிடைத்தவர்கள் அப்பாவிகள்' என்றனர்.

"நான்கூடப் பயந்தேன்—'நான்காவது நாள் ஓடிவிடுவார்களோ'—என்று, அவர்கள் கூறினதும்! காரணம், செல்வந்தர்களிடம் திரட்டிய பணம்—கொள்ளையடித்த பணம்—இவைகளால் எங்கே நமது தோழர்களையெல்லாம் பத்தாயிரம் இருபதாயிரம் என்று ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கிவிடுவார்களோ என்பதுதான். ஆனால், நாமாகக் கையைப் பிடித்துக் கண்ணீரைத் துடைத்து விலகச் சொன்னதைத் தவிர, ஒரு கழகத் தோழராவது கண்ணியத்தை மீறி—கட்டுப்பாட்டைக் கடந்து காசுக்கு ஆசைப்பட்டு விலகவில்லை.

'மந்திரிகள் நின்ற ஒவ்வொரு இடமும், 'அமாவாசையா' என்று கவனித்து—'சிறு தூறல் இருக்கிறதா' என்று பார்த்து—'ஆண்கள் வெளியூர் போய்விட்டார்களா' என்று ஆராய்ந்து, அதன் பின் நுழையும் திருடனைப்போல், 'கம்யூனிட்டி பிராஜெக்ட்'டுகளில் நின்றார்கள்!

"பத்து இலட்சத்திற்குச் சொந்தக்காரர்—பத்து வருடங்களாக மந்திரி பதவி வகிப்பவர் பக்தவத்சலம்! அவரை, சாதாரண தாசு மண்டி அண்ணாமலை எதிர்த்து நின்றார். எப்படிப்பட்ட இடம் அது? 'பாதை சரியாக இல்லை—போட்டோம்; விளக்கு இல்லை—தந்தோம்; ஏரிக்கரை?—நாளைபார்' என்று வரம் தரக்கூடிய 'கம்யூனிட்டி பிராஜெக்ட்!' அப்படியிருந்தும் அவர் பெற்ற அதிக வாக்குகள் 3,000! வெட்கமிருக்கவேண்டாமா?

"பெரியாரின் பேரன்புக்குப் பாத்திரமான காமராசரை ஒழிக்க வேண்டுமென நானும் நினைத்திருந்தால், 3,000 ஓட்டு வித்தியாசத்தில் காமராசர் வெற்றி பெற்றிருக்க முடியுமா? நமக்குத் தொல்லை தந்த திராவிட கழகத் தோழர்கள்போல், நமது தோழர்களும் சாத்தூர் சென்றிருந்தால் அவர் வெற்றிபெற்றிருக்க முடியுமா என்று இந்தக் கூட்டத்தின் ஓரங்களில் நின்று கேட்கும் நல்ல காங்கிரஸ்காரர்கள், நெஞ்சில் கை வைத்துப் பார்க்கட்டும். எனவே, 'மந்திரிமார்களெல்லாம் மயிரிழை தப்பினார்கள்' என்று சொல்ல வேண்டுமே தவிர வெற்றிபெற்றார்கள் என்று கூறமுடியும்!

"நமக்கு இந்தத் தேர்தல் மூலம் நிலம் எப்படிப்பட்டது என்பதும் புரிந்துவிட்டது; உழுகின்ற முறையும் தெரிந்துவிட்டது; இப்போது பணம் தான் இல்லை.

"நான் வெற்றிபெற்ற செய்தியையும் நாவலர் நெடுஞ்செழியனின் வேதனைச் செய்தியையும் நாடு ஒன்றாக அனுபவிக்கவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்படுமென நான் எதிர்பார்க்கவில்லை. கரும்பு தின்பதற்காகக் கத்தியெடுத்து, கைதவறி அது கையில் பட்டுவிடுவதுமுண்டு. ஒரு கையில் கரும்பு; மற்றொரு கையிலோ காயம்! இந்த இரண்டும் ஒருசேர உள்ளதுபோல நாடு இன்று அனுபவிக்கிறது.

"தேர்தலில் ஏற்பட்ட வெற்றி—தோல்வியைப்பற்றி நாம் கவலைப்படவில்லை; ஏற்கனவே நாம் அதைக் குறிப்பிட்டோம்—தேர்தல் என்றதும் வெற்றி என்று அர்த்தம் அல்ல' என்று.

"சில கம்யூனிஸ்டு நண்பர்கள் சதி செய்துவிட்டார்கள் என்று கூறுவதில் நான் ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவர்கள் அப்படிச் செய்யாமலிருந்தால்தான் நான் ஆச்சரியப்பட்டிருப்பேன்; என்றால், நம்மைப் பொறுத்தவரையில் அவர்கள் இருவருமே 'அகில இந்தியா'க்கள் என்பதையும், அவர்கள் சதி செய்வார்கள் என்பதையும் நாம் முதலிலேயே உணர்ந்தவர்கள். இதை நாடும் நன்கறியும். திராவிட முன்னேற்றக் கழகம் இதில் தப்புக்கணக்குப் போட்டதில்லை. ஆகவே, அவர்கள் எப்படி எப்படி செய்வார்கள் என்பதை அறிந்து கம்யூனிஸ்டுகளின் கடைசிச் சதியை முறியடிக்கத்தக்கவகையில் பணி புரிந்திருக்கவேண்டும். அதை முறியடிக்கத் தக்கவகையில் பணியாற்ற ஆர்வம் மிக்க வாலிபத் தோழர்கள் இல்லையா? அறிவுப் படை இல்லையா? ஏராளமாக உண்டு.

"யார் யாருக்கு என்னென்ன ஆதாரம் கிடைத்தாலும்—எங்கெங்கு எப்படியெப்படி சதி நடந்திருந்தாலும் அதற்கான ஆதாரங்களைத் தாருங்கள். நீதிமன்றத்திற்குச் செல்வோம். அங்கே நீதி கிடைத்தபின் மறு தேர்தலில் உங்கள் குறையை நீக்கிக் கொள்ளுங்கள்.

"வேதனையை வலிவாக மாற்றி—சோகத்தைச் சக்தியாக்கி—ஏமாற்றத்தை ஏற்றத்திற்கு வழியாக்கி—நீங்கள் கொண்டுள்ள உறுதிப்பாட்டையே நானும் பெற்று, நீதிமன்றத்திற்குச் சென்று சதியை அம்பலமாக்கி வெற்றிக்கு வழிதேடுவேன்."

வட நாட்டில்...!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிற 1959-ம் ஆண்டு ஜனவரி 1-ந் தேதிக்குள்ளாக தொழிற்சாலைக்கான கட்டிட வேலைகளை முடித்துவிட வேண்டுமென்றும், அதிலிருந்து 6 மாத காலத்திற்குள், முதல் தவணையாக 75,000 பவுன் தயாரிக்கப்படும் என்றும், அதன் பின்னர் 18 மாத காலத்திற்கு ஒரு முறை வீதம் மற்ற 3 தவணை சப்ளையும் தயாரிக்கப்பட்டுவிடும் என்றும் சர்க்கார் முடிவு செய்துவிட்டதாம்.

இத்தொழிற்சாலை வேலைகளை மேற்பார்வையிடுவதற்கான பயிற்சி அளிப்பதற்காக, அந்த நிறுவனத்தார், பெரும் அளவில் இந்தியத் தொழில் நுட்பமானவர்கட்குப் பயிற்சி அளிப்பதென்றும், முதல் ஆண்டில் 900-பேரும், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாவது ஆண்டுகளுக்குள், வருடம் 2,000 பேர் பயிற்சி பெறும் வசதியுடைய ஒரு பயிற்சிக் கல்லூரி நிறுவப்படும் என்றும் தெரிகிறது.

நன்றியறிவிப்பு

பேசின்பிரிட்ஜ் தொகுதியில் உள்ள தி. மு. கழகக் கிளைகளும், கழகத் தோழர்களும் கழகச் சார்புடைய நிறுவனங்களும் வாக்காளர் பெருமக்களும், தி. மு. கழகச் சார்பில் சென்னை சட்டசபைத் தேர்தலில் அபேட்சகனாகப் போட்டியிட்ட எனக்கு மனப்பூர்வமான ஒத்துழைப்பும் பெருந்துணையும் புரிந்தமைக்கு எனது பணிவன்பான வணக்கத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தலின் முடிவு நமக்குப் பாதகமாய் இருப்பதைக் கண்டு துயரத்தில் ஆழ்ந்துள்ள தோழர்கள் ஆறுதல் கொள்ள வேண்டுகிறேன். அண்ணா அவர்கள் நமக்கு அவ்வப்போது எடுத்துக் காட்டிவந்துள்ளபடி எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்கள் நாம் என்பதை கழகத் தோழர்களும் அனுதாபிகளும் இச்சந்தர்ப்பத்தில் நினைவில்கொண்டு அமைதியாக இருக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர்களின் தார்மீக ஆதரவு நம் கழகத்தின்பால் இருப்பதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இத்தேர்தலில் ஆளும்வர்க்கம் குறிப்பிட்ட தொகுதிகளில் கடைசி நேரத்தில் கையாண்ட நடவடிக்கைகளைப்பற்றி பொதுமக்கள் வெளிப்படையாகப் பேசிக்கொள்வது நாம் அறிந்ததேயாகும். நமது கழகமோ, வாக்காளர்களிடத்திலிருந்தே பண உதவி பெற்றுள்ளது.

எனவே, வாக்காளர்களின் உண்மையான ஆதரவு கழகத்தின்பால் இருக்கிறதென்பதை நாம் அறிந்து, நமது பணியை விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து எதிர்காலத்தில் வெற்றிகரமாக முடிக்கப் பாடுபட வேண்டுகிறேன். அனைவருக்கும் எனது பணிவன்பான வணக்கம் உரித்தாகுக.

அன்புள்ள,

என். வி. நடராசன்

பாராளுமன்றத் தேர்தல்:

நாமக்கல் தொகுதியில் சம்பத் பெற்ற வாக்குகள் விவரம்

சென்னை, மார்ச் 18—

தமிழகத்திலேயே மிகப் பெரும் தொகுதியான நாமக்கல் பாராளுமன்றத் தொகுதியில் கழக அபேட்சகராகப் போட்டியிட்ட தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ், மற்றுமிரு சுயேச்சை அபேட்சகர்களையும்விட பெரும்பான்மையான வாக்குகள் அதிகம் பெற்று மகத்தான வெற்றிபெற்றிருக்கிறார்.

நேற்று அறிவிக்கப்பட்ட அதிகாரபூர்வமான விவரப்படி தோழர் சம்பத் அவர்களுக்கு, காங்கிரஸ் அபேட்சகருக்குக் கிடைத்ததைவிட **26,535** வாக்குகள் அதிகம் கிடைத்துள்ளன.

வாக்கு விவரம்:

ஈ. வெ. கி. சம்பத்	**1,82,066**
டி. எ. எம். சுப்பிரமணியம் (காங்.)	1,55,531
கேசவலால் காளிதாஸ் சேட் (சுயே.)	70,673
பரமசிவகவுண்டர் (சுயே.)	41,848

தனித் தொகுதியில்

நாமக்கல் மக்கள் சபை தனித் தொகுதிக்கு தி. மு. க. அபேட்சகராக போட்டியிட்ட டி. வி. சுந்தர்ராஜ் அவர்களைவிட சில வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் எஸ். ஆர். ஆறுமுகம் வெற்றி பெற்றார்.

உரிமை வேட்கை பெற்ற மக்கள் எண்ணிக்கை

போட்டியிட்ட கழக அபேட்சகர்கள் பெற்ற வாக்கு விபரங்கள்

சென்னை, மார்ச் 18—

தேர்தல் முடிவுகள் குறித்து மேலும் சில இடங்களிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

வட ஆற்காடு மாவட்டம் குடியேற்றம் இரட்டைத் தொகுதியில் பொதுத் தொகுதிக்குக் கம்யூனிஸ்டு அபேட்சகர் தோழர் வி. கே. கோதண்டராமனும், தனித் தொகுதிக்கு காங்கிரஸ் அபேட்சகரும் கழக அபேட்சகர்களைவிட அதிக வாக்குகள்பெற்று வெற்றிபெற்றிருக்கின்றனர்.

திருத்துறைப்பூண்டி இரட்டைத் தொகுதியிலும் கழக அபேட்சகர்களைவிட அதிக வாக்குகள் பெற்றுக் காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாகப்பட்டினம் தொகுதியில் போட்டியிட்ட கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் காங்கிரஸ் அபேட்சகரால் தோற்கடிக்கப்பட்டுவிட்டார். அங்கு நமது கழக அபேட்சகராக இசைமுரசு நாகூர் அனீபா போட்டியிட்டார். காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நிலக்கோட்டை பொதுத் தொகுதியிலும் கழக அபேட்சகரைவிட அதிக வாக்குகள் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. தனித் தொகுதியிலும் காங்கிரஸ் அபேட்சகர் திருமதி பொன்னம்மாள் வெற்றிபெற்றுள்ளார்.

மாயூரம் தனித் தொகுதியில் போட்டியிட்ட கழக அபேட்சகர் தோழர் பிச்சை அவர்களைவிட அதிகம் வாக்குகள் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றியடைந்திருக்கிறார்.

கழகம் போட்டியிடாத மற்ற இடங்களில், திருக்கோயிலூர் இரட்டைத் தொகுதியில் ஒன்று காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டிக்கும் மற்றொன்று காங்கிரசுக்கும் சென்றுள்ளது. பொதுத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரைவிட சுமார் 3,500 வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகர் எஸ். ஏ. எம். அண்ணாமலை வெற்றி பெற்றிருக்கிறார். ஆனால், தனித் தொகுதியில், காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி அபேட்சகரைவிட சுமார் 3,700 வாக்குகள் அதிகம் பெற்று காங்கிரஸ் அபேட்சகர் வெற்றி பெற்றிருக்கிறார்.

மற்றும் ஜெயங்கொண்டம், செய்யாறு, வந்தவாசி (இட்டைத் தொகுதி) ஆகிய தொகுதிகளில் காங்கிரஸ் அபேட்சகர்களே வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.